# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2022 யூலை

## (203) வணிகச் சட்டம்

## பகுதி - A

### வினா இல. 01

இவ்வினா 25 புள்ளிகளுக்காக 14 நோக்கச் சோதனை வினாக்களை (OTQs) கொண்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்கப்பட்டிருந்தன. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் 20 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இல. **1.14** இற்கு சரியான விடை அளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இருப்புச் சந்தையில் நிகழும் உட்பக்கக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி எவ்வித அறிவையும் கொண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் வினா இல**. 1.11** இற்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு சரியாக விடை அளித்திருந்தனர். வினா இல. **1.13** மிகவும் எளிதான ஒரு வினாவாகும். ஆனால் சில பரீட்சார்த்திகள் வெவ்வேறு விடைகளை வழங்கியிருந்தனர். ஏனைய வினாக்களுக்குச் சரியாக விடையளிக்கப்பட்டிருந்தன.

இந்த வினா சித்திப் புள்ளியினை அடைவதற்கு மிக நெருக்கமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

**பகுதி – A** இற்கு உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சார்த்திகள் சிவில் சட்டம், பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம், முஸ்லிம் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சர்வதேசச் சட்டம், தொழில் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டம் போன்றவை பற்றிய நல்ல அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி - B

### வினா இல. 02

இந்த வினா பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்த விவரணம் பொருள்கள் விற்பனைச் சட்டத்தின் உட்கிடையான நிபந்தனைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய உட்கிடை நிபந்தனையை ஏற்பிசைவு செய்திருந்ததுடன் பகுதி **(a)** இற்கு சரியான விடை அளித்திருந்தனர். அதாவது, உண்மையான உரிமையாளர் **பீட்டர்** என்பதால் **ஜேம்ஸ்** என்பவர் லொறிக்கான உரித்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். பொருள்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின்படி, ஆதனத்தை கைமாறும்போது பொருள்களை விற்பதற்கான உரிமையை விற்பனையாளர் கொண்டிருக்க வேண்டும் என்பது உட்கிடை நிபந்தனையாக இருக்கிறது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தவறான விடைகளை அளித்திருந்தனர்.

**பகுதி (b)** ஆனது பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொருள்களின் வகைகளைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு சரியான விடையினை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இந்த வினா கம்பனிச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது கம்பனிச் சட்டம் தொடர்பான ஒரு இலகுவான வினாவாகும். இவ்வினாவின் **பகுதி (a)** இல், பணிப்பாளர் ஒருவராக வருவதற்கு பூரணப்படுத்தப்பட வேண்டிய 4 தகைமைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனிச் சட்டத்தில், பணிப்பாளர் ஒருவரின் தகைமையீனங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் தகைமைகளைக் குறிப்பிட்டிருந்ததுடன் வேறு சிலர் தகைமையீனங்களைக் குறிப்பிட்டிருந்தனர். பொருத்தமான முறையில் வழங்கப்பட்ட விடைகளுக்கு புள்ளிகள் வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த வினாவின் **பகுதி (b)** இற்கு, பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர். **பகுதி (b)** இல், கம்பனிச் சட்டத்தின் கீழ், பணிப்பாளர் ஒருவரின் பிரதான கடமைகளை பட்டியலிடுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இவ்வினாவின் **பகுதி (c)** இல், தனியார் கம்பனி ஒன்றிற்குத் தேவையான பணிப்பாளர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கையைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இந்த வினா நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அதில் **பகுதி (a)** இற்கு சரியான விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட சட்டத்தை முறையாகப் படிக்காததன் காரணமாக **பகுதி (a)** இற்கு சரியான விடையை அளிப்பதற்குத் தவறியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கும்கூட சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியாக அமையவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை.**

## வினா இல. 05

இவ்வினா கைமாறத்தகு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வினாவின் **பகுதி (a)** இல், தரப்பட்ட விவரணம் தொடர்பில் வங்கியின் பொறுப்பினை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையை கருமபீடத்தில் காசாக மாற்ற முடியாது என்பதை பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன், காசோலை சரியானவாறு எழுதப்படாத சந்தர்ப்பத்தில், வங்கி அதனை நிராகரிப்பதற்கான (காசு வழங்க மறுப்பதற்கான) அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. **பகுதி (b)** ஆனது, ''பொதுவான குறுக்குக் கோடிடல்'' மற்றும் ''விசேடமான குறுக்குக் கோடிடல்'' ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** இற்கு சரியான விடைகளை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்கும் **பகுதி (b)** இற்கும் சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் கைமாற்றத்தகு சாதனங்கள் பற்றிய போதுமான அறிவைக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

இந்த வினா காப்புறுதிச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இது காப்புறுதிச் சட்டம் தொடர்பான ஓர் இலகுவான வினாவாகும். **பகுதி (a)** ஆனது ஆயுள் காப்புறுதியின் கீழ் **அபேக்ஷாவின்** பின்னுரித்தாளி நட்டஈடு கோர முடியுமா என்பதை விபரிக்குமாறு கேட்டிருந்தது. **பகுதி (b)** ஆனது காப்புறுதி ஒப்பந்தமொன்றின் 3 பிரதான கூறுகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் **பகுதி (a**) இற்கு சரியான விடை அளித்திருந்தனர். காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் சமயத்தில் உயர் நன்னம்பிக்கை கோட்பாட்டை **அபேக்ஷா** மீறியிருந்ததால், அவருடைய ஆயுள் காப்புறுதியின் கீழ் அவரைச் சார்ந்தவர்களுக்கு நட்டஈடு கிடைக்காது என்பதை அவர்கள் சரியாக விளங்கிக் கொண்டிருந்தனர். இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது ஓரளவு இலகுவான வினாவாக இருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் அதனைத் தவறாக விளங்கியிருந்தனர். அவர்கள் ஒப்பந்தக் காப்புறுதி ஒன்றின் தரப்பினரைக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

# <u>பகுதி - C</u>

## வினா இல. 07

இந்த வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(A) இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது:**

**(a)** விருப்பறிவிப்பு முடிவுறுத்தப்படும் வழிமுறைகள் பரீட்சிக்கப்பட்டிருந்தன. பெரும்பாலானவர்கள் முறைகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை அவர்களால் விபரிக்க முடியவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்ததுடன், அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். உருவாக்கப்பட வேண்டிய வலிதான ஒப்பந்தமொன்றிற்கு, விருப்பறிவிப்பும் ஏற்பனவும் சரியாகச் செய்யப்பட வேண்டும். இந்த விவரணத்தைப் பொறுத்தமட்டில், அது நடைபெற்றிருக்கவில்லை.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கத் தவறியிருந்தனர். எதிர் விருப்பறிவிப்பு ஒன்று காணப்படுமாயின், அங்கு வலிதான ஒப்பந்தமொன்று காணப்படாது என்பதை அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியற்ற மட்டத்தில் இருந்தது.**

**(B) இந்தப் பகுதி முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது :**

**(a)** இந்தப் பகுதி, முகவராண்மைச் சட்டத்தின் கீழ் **கதிர்** தொடர்பாக **வீனா**வின் கடமைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. **வீனா** என்பவர் **கதிரின்** ஊழியர் ஒருவராக இருப்பதால், அவர் **கதிரின்** ஒரு முகவராக இருப்பதுடன், முகவராண்மை ஊடாகப் பெற்றுக்கொண்ட தகவல்களின் இரகசியத்தன்மையை பேணுவதும் அவரின் கடமையாகும். எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு சரியாக விடையளிப்பதற்கான முயற்சியில் ஓரளவு வெற்றியடைந்திருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி, முகவராண்மைச் சட்டத்தின் கீழ், **கதிர்** மற்றும் **ரொனி** ஆகியோருக்கு இடையிலான உரிமைகளையும் கடமைகளையும் ஆராயுமாறு கேட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிக விலையொன்றில் ஆதனத்தை வாங்குவதற்கு விரும்புகின்ற புதிய கொள்வனவாளர் தொடர்பில் வெளிப்படுத்தாததன் காரணமாக, முதல்வரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் **ரொனி** இணங்கியிருக்கவில்லை. அதற்கிணங்க, முகவர் ஒருவராக தனது கடமையை அவர் மீறியுள்ளார். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இந்த விடயத்தைச் சரியாக விபரிக்க முடியவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை எழுதவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** வினாத்தாளுக்கு விடையெழுதும்போது விடயங்களைச் சரியாக இனங்கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப் பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் நடைமுறை அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -